**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**CC.No**.4 /2023

**வழக்கு சாட்சி PW.7**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **பன்னீர்செல்வம்** | தொழில் | :விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : சண்முகம் | கணவர் பெயர் | : ----- |
| கிராமம் | : அரசன்கோடை | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 29/2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 16.05.2025 |

**( எதிரி மனுவின்பேரில் ஆஜரில் இல்லை )**

**முதல் விசாரணை :**

நான் அரசன்கோடையில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரியான சின்னானை தெரியும். தேதி நினைவில்லை. கடந்த 2022ம் வருடம் தாண்டிக்குடியில் இருந்து அரசன்கோடைக்கு செல்லவேண்டி இரவு 09.00 மணியளவில் எங்கள் ஊரைச்சேர்ந்த சின்னான் என்பவருக்கு சொந்தமான நான்கு சக்கர ஜீப்பில் கிளம்பினோம். அந்த வாகனத்தில் என்னைச்சேர்த்து பத்து நபர்கள் பயணித்தோம். அந்த வாகனத்தை சின்னான்தான் ஓட்டினார்.இரவு 10.30 மணியளவில் நாங்கள் பயணித்த வாகனம் அலஞ்சோடை பகுதியில் உள்ள மண் பாதை வழியாக மலைப்பாதையில் செல்லும்போது மழைப்பெய்ததால் ஏற்ப்பட்டிருந்த செகதியில் எங்கள் வாகனம் சிக்கி வாகனம் சுற்றி கட்டுப்பாட்டை இழந்து இடதுபுறம் இருந்த பள்ளத்தாக்கில் வாகனம் கவிழ்ந்துவிட்டது. விழுந்ததில் எனக்கு இடது கண் புறுவம் அருகே இரத்த காயம் ஏற்ப்பட்டது. எங்களுடன் பயணித்து வந்த ஈஸ்வரனுக்கு கழுத்திலும், சேகருக்கு தலையிலும் காயம், சரத்குமார் என்பவருக்கு வலது காலிலும் காயம் ஏற்ப்பட்டது. எங்களுடன் பயணித்து வந்த எங்கள் ஊரைச்சேர்ந்த அபிராமன் என்பவர் அபிராமன் என்பவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். பிறகு எங்களுடன் வந்தவர்கள் தகவல் சொல்லி தாண்டிக்குடியைச் சேர்ந்த பாலாஜி என்பவர் அவரது பிக்கப் வாகனத்தில் வந்து காயமுற்ற எங்களை மீட்டு தாண்டிக்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார். அங்கு முதலுதவி சிகிச்சை பெற்று திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்கு கொண்டு சென்றார்கள். அங்கு

நான் திண்டுக்கல் அரசு மருத்துவமனை நான்கு நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எனக்கு நான்கு சக்கர வாகனம் ஓட்ட தெரியாது .அலஞ்சோடை பாதையானது மண் பாதை என்றால் சரிதான் . அந்த பாதை கல், மண், செகதி நிறைந்த பாதை என்றால் சரிதான் . அந்த பாதையில் எவ்வாறு வாகனங்கள் இயக்கப்படும் விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான் . நாங்கள் சென்ற பாதை செம்மண் பாதை என்பதால் அப்போது ஏற்ப்பட்ட மழை காரணமாக வாகனத்தை எவ்வளவு கவனமாக இயக்கினாலும் செகதியின் காரணமாக வாகனம் ஒருபுறம் இழுத்துசெல்ல அதிகம் வாய்ப்புள்ளது என்றால் சரிதான். நாங்கள் சென்ற தார்பாய் ஜீப்பும் திடீரென பெய்த மழை காரணமாக செகதியில் வாகனத்தின் சக்கரம் சிக்கி ஒருபுறம் இழுக்கப்பட்டு விபத்து நேர்ந்தது என்றால் சரிதான்.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2025.05.16 18:02:33 +0530

District Munsif cum Judicial Magistate No.I,
Kodaikanal.

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**CC.No**.4 /2023

**வழக்கு சாட்சி PW.7**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **சேகர்** | தொழில் | :விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : கரியமுத்து | கணவர் பெயர் | : ------ |
| கிராமம் | : அரசன்கோடை | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 37/2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 16.05.2025 |

**( எதிரி மனுவின்பேரில் ஆஜரில் இல்லை )**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் அரசன்கோடையில் விவசாய வேலை செய்து வருகிறேன். தேதி நினைவில்லை. கடந்த 2022ம் வருடம்போல் தாண்டிக்குடியில் இருந்து அரசன்கோடைக்கு செல்லவேண்டி இரவு 09.00 மணியளவில் எங்கள் ஊரைச்சேர்ந்த சின்னையா என்பவருக்கு சொந்தமான தார்பாய் ஜீப்பில் கிளம்பினோம். அந்த வாகனத்தின் பதிவெண் தற்போது எனக்கு நினைவில்லை. என்னைச்சேர்த்து அந்த வாகனத்தில் பத்து நபர்கள் பயணித்தோம். அந்த வாகனத்தை சின்னையா என்பவர் இயக்கினார். இரவு 10.30 மணியளவில் நாங்கள் சென்ற வாகனம் அலஞ்சோடை வழியாக செல்லும் மண் பாதை வழியாக மலைஏற்றத்தில் எங்கள் வாகனம் சென்று கொண்டிருந்தபோது மழைத்துரல் பொழிந்து கொண்டிருந்தது. அப்போது நாங்கள் சென்ற வாகனத்தில் பிரேக் பிடிக்கப்பட்டபோது மண் சாலையின் பகுதி எங்கள் வாகனத்தை ஒருபுறமாக இழுத்ததில் எங்கள் வாகனம் வலதுபுறம் இருந்த பள்ளத்தில் கவிழ்ந்தது. அதில் எனக்கு தலையில் பின்புறம் பலத்த காயம் ஏற்ப்பட்டது. அதில் இந்த வழக்கின் எதிரியான சின்னையா என்பவருக்கு தலையில் காயம் ஏற்ப்பட்டது. ஈஸ்வரன் என்பவருக்கு தலையின் பின்புறம் பலத்த காயம் ஏற்ப்பட்டது. எங்களுடன் வந்த செந்தில், சரத்குமார், பன்னீர்செல்வம் ஆகியோர்களுக்கு ஊமை காயம் ஏற்ப்பட்டது. எங்களுடன் பயணித்து வந்த அபிராமன் என்பவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். பிறகு எங்களில் சிலர் தகவல் சொல்லி பாலாஜி என்பவர் தாண்டிக்குடியில் இருந்து பிக்கப் வாகனம் மூலம் வந்து எங்களை மீட்டு தாண்டிக்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு

சென்றார்கள். அங்கு முதலுதவி சிகிச்சை பெற்று திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்கு கொண்டு சென்றார்கள். அங்கு நான் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் மூன்று நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எனக்கு நான்கு சக்கர வாகனம் ஓட்ட தெரியும் . தாண்டிக்குடியில் இருந்து அரசன்கோடைக்கு செல்லும் இடையே உள்ள அலுஞ்சோடையில் அமைந்துள்ள பாதையானது மண் பாதை என்றால் சரிதான் . அது மண், செகதி, கல் ஆகியவை உள்ள பாதைப்பகுதி என்றால் சரிதான் . மண் சாலையில் வாகனத்தை இயக்கும்போது திடீரென்று மழை பொய்தால் வாகனம் மண் சாலையில் சிக்கி வாகனம் கட்டுப்பாட்டை இழந் து எவ்வளவு கவனமாக ஓட்டினாலும் விபத்து நேர வாய்ப்புள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன விதத்தில்தான் சம்பவ தேதியன்று விபத்து நேர்ந்தது என்றால் சரிதான்.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

District Munsif cum Judicial Magistate No.I,
Kodaikanal.

**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**
**கொடைக்கானல்.**
**CC.No**.4 /2023
**வழக்கு சாட்சி PW.6**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **செந்தில்குமார்** | தொழில் | :விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : பாலன் | கணவர் பெயர் | : ----- |
| கிராமம் | : அரசன்கோடை | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 35/2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 16.05.2025 |

**( எதிரி மனுவின்பேரில் ஆஜரில் இல்லை )**

**முதல் விசாரணை :**

நான் அரசன்கோடையில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரியான சின்னையாவை தெரியும். கடந்த 2022 ம் வருடம் கார்த்திகை மாதம் போல் விவசாய பொருட்களை தாண்டிக்குடியில் இறக்கிவிட்டு எங்கள் ஊரைச்சேர்ந்த சின்னையாவிற்கு சொந்தமான தார்பாய் ஜீப்பில் என்னுடன் சேர்த்து எங்கள் ஊரைச்சேர்ந்த ஒன்பது நபர்கள் தாண்டிக்குடியில் இருந்து அரசன்கோடைக்கு செல்லவேண்டி இரவு 08.45 மணியளவில் தார்பாய் ஜீப் கிளம்பியது. அந்த வாகனத்தை சின்னையா தான் ஓட்டினார். நான் வாகனத்தின் பின்புறம் அமர்ந்திருந்தேன். அன்றை தினம் மழை பெய்து கொண்டிருந்தது.. எங்கள் ஊருக்கு செல்லும் பாதையான அலஞ்சோடை சாலை மண் பாதை யாகும்.. அந்த பாதையில் எங்கள் ஜீப் வாகனம் சென்றபோது மழை காரணமாக மண் செகதியாக மாறி வாகனத்தை ஒருபுறம் இழுத்துவிட்டது. அதனால் வாகனம் கட்டுப்பாட்டை இழந்து இடது புறம் இருந்த 150 அடி பள்ளத்தில் நாங்கள் சென்ற ஜீப்பானது கவிழ்ந்துவிட்டது.. விழுந்ததில் எனக்கு இடுப்பில் இரத்த காயம் ஏற்பட்டது. உடலில் ஆங்காங்கே சிறு காயங்கள் ஏற்பட்டது. என்னுடன் பயணித்த எங்கள் ஊரைச்சேர்ந்த ஈஸ்வரன் என்பவருக்கு முதுகு எலும்பில் காயம் ஏற்பட்டது. அதேபோன்று பன்னீர் என்பவருக்கு கண்ணில் காயமும், சேகர் என்பவருக்கு பின் தலையிலும் காயம் ஏற்பட்டது. எங்களுடன் பயணித்து வந்த எங்கள் ஊரைச்சேர்ந்த குப்புச்சாமி மகன் அபிராமன் என்பவர் விபத்தின் காரணமாக சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். பிறகு பள்ளத்தில் விழுந்த எங்களை தாண்டிக்குடியை சேர்ந்த பொதுமக்கள் மீட்டு

தாண்டிக்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அங்கு எங்களுக்கு முதலுதவி சிகிச்சை அளித்து திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்றார்கள். அங்கு நான்கு நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எனக்கு நான்கு சக்கர வாகனம் ஓட்ட தெரியாது . தாண்டிக்குடியில் இருந்து அரசன்கோடை செல்லும் இடையே உள்ள அலஞ்சோடை பாதையானது மண் பாதை என்றால் சரிதான் . அந்த பாதை கல், மண், செகதி நிறைந்த பாதை என்றால் சரிதான் . அந்த பாதையில் எவ்வாறு வாகனங்கள் இயக்கப்படும் விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான் . நாங்கள் சென்ற பாதை செம்மண் பாதை என்பதால் அப்போது ஏற்ப்பட்ட மழை காரணமாக வாகனத்தை எவ்வளவு கவனமாக இயக்கினாலும் செகதியின் காரணமாக வாகனம் ஒருபுறம் இழுத்துசெல்ல அதிகம் வாய்ப்புள்ளது என்றால் சரிதான். நாங்கள் சென்ற தார்பாய் ஜீப்பும் திடீரென பெய்த மழை காரணமாக செகதியில் வாகனத்தின் சக்கரம் சிக்கி ஒருபுறம் இழுக்கப்பட்டு விபத்து நேர்ந்தது என்றால் சரிதான்.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

District Munsif cum Judicial Magistate No.I,
Kodaikanal.